**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.18/2023**

2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 05.02.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழழகன் | ஜாதி | : | |
| த/பெயர் | : | பொன்னுசாமி | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**வா.சா.1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நாகப்பன் மகன் சீனிவாசன் என்பவரை எனக்கு தெரியாது. சீனிவாசன் என்பவர் நாகப்பனின் தந்தையார் ஆவார். மல்லிகா என்பவர் நாகப்பனின் மனைவி ஆவார். நாகப்பனுக்கு 2 பெண்குழந்தைகள். அவர்கள் பெயர் தெரியாது. மன்னார்குடியில் இருக்கிறார்கள். நாகப்பன் ஏதாவது ஒரு சொத்தை மல்லிகாவிற்கு எழுதிக்கொடுத்தாரா என்றால் எழுதிக்கொடுத்துள்ளார். அதை பார்த்துதான் இந்த சொத்தை கிரையம் வாங்கினேன்.

2) முருகேசன் நாகப்பனின் அண்ணன் மகன் ஆவார். சீனிவாசனின் பேரப்பிள்ளை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ஆதியில் சீனிவாசன் என்பவருக்கு சொந்தமாக இருந்தது என்றால் சரியல்ல. நாகப்பன் என்பவரிடமிருந்து மல்லிகாவிற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. நாகப்பனுக்கு 2 பெண்பிள்ளைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த 2 பெண்பிள்ளைகளும் கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு தெற்குபுறத்தில் சுந்தரம்பாள் உள்ளார்.

3) பிரதிவாதி என்ன காரணத்திற்காக தாவா சொத்தை வைத்துக்கொண்டு என்னிடம் கொடுக்க மறுக்கிறார் என்றால் பங்காளி என்ற முறையில் அனுபவித்துக் கொண்டு

என்னிடம் கொடுக்க மறுக்கிறார். நான் தாவா சொத்தை நீதிமன்றம் மூலமாக வசம் எடுத்துக்கொள்ள சொல்லி தான் கேட்டுள்ளேன். இனி அவர் தாவா சொத்தில் தொந்தரவு செய்யகூடாது என்று கேட்டுள்ளேன்.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.02.14 10:47:23 +0530

District Munsif

Mannargudi.